DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.60/2021** |
| **Deposition of witness for** | : | **Plaintiff/Defendant** |
| **Serial No. of Witness** | : | **PW.3** |
| **Name** | : | சரவணன் |
| **Father's Name** | : | செந்தூர்பாண்டி |
| **Village** | : | களக்காடு |
| **Taluk** | : | நான்குநேரி தாலுகா |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 26.07.2023.

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் பொதுப்பணி மேற்பார்வையாளராக களக்காடு நகராட்சியில் பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்ற அழைப்பாணையில் களக்காடு நகராட்சி பேரூராட்சியாக இருந்தபோது களக்காடு பேரூராட்சி 19வது வார்டில் குலசேகரன்அம்மன்கோவில் சுற்றி போடப்பட்ட தார்சாலை குறித்து 09.06.2020 அன்று த.அ.உ.ச.மனு எண் 10/2020, நாள் 09.06.2020ம் தேதியில் வழங்கிய தகவல்கள் குறித்து மேற்படி மனு கோப்பின் சான்றிட்ட நகல் கோரப்பட்டுள்ளது. அதன் அசலும் சான்றிட்ட நகலும் கொண்டு வந்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.6 தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் எங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ள ஆவணம்தான். அதே போன்று என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 25.10.2019லும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் எங்கள் அலுவலகத்தில் இருந்து வாதியின் மனு மீதான பதில் அறிக்கை தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. அது **சா.சா.ஆ.5**. கோவிலை சுற்றி பொது நிதியில் இருந்து சுமார் 50 லட்சம் ரூபாய் செலவில் தார்சாலை போடப்பட்டுள்ளது. அந்த தார் சாலையானது கீழபத்தை மெயின்ரோட்டில் இருந்து குலசேகர அம்மன் கோவிலை சுற்றி போடப்பட்டுள்ளது. மேற்படி தார்சாலை போடப்பட்டதற்கான நடவடிக்கையின் கோப்பு சான்றிட்ட நகல் **<u>சா.சா.ஆ.6.</u>** மேற்படி

தார்சாலை போடுவதற்கு பேரூராட்சியாக இருந்தபோது மகாராஜன் என்பவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றிய விவரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அதே போன்று வா.சா.ஆ.6 மற்றும் சா.சா.ஆ.5. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வழங்கிய தகவல் எந்த தகவலின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் சா.சா.ஆ.5ல் உள்ள வரைபடத்தில் புல எண் , எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதில் புல எண் எதுவும் சொல்லமாட்டார்கள். நான் சாட்சி சொல்ல வருவதற்கு முன்பு பத்தை மெயின்ரோட்டில் இருந்து சுடுகாடு வரை செல்லும் பாதையை நான் பார்த்தேனா என்றால், பார்த்தேன். கோவில் சுடுகாட்டிற்கு வடக்கேதான் உள்ளது என்றால் சரிதான். கோவிலுக்கு வடக்கு பக்கமோ கீழ்பக்கமோ, மேல்பக்கமோ வராது அந்தசுடுகாட்டிற்கு செல்லும் ரோடு தனியாகதான் உள்ளது என்று சொன்னால் சரிதான். தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள கோப்பு நான் கொண்டு வந்துள்ள கோப்பில் இல்லை என்று சொன்னால் சரிதான். அதனால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் கொடுத்த அலுவலரை விசாரித்தால்தான் சா சா ஆ 5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணம் பற்றிய விவரம் தெரியும் என்ற சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள கோப்பில் புல எண் 713ல்தான் தார்சாலை அமைக்கப்பட்டது என்ற விவரம் இல்லை என்று சொன்னால் சரிதான். பொதுவாக சர்வே எண் எந்த கோப்பிலும் இருக்காது ரோடு லெட்சரில்தான் அந்த விவரம் இருக்கும் சாலை பதிவேடு எங்கள் அலுவலகத்தில் நாங்கள் பராமரித்து வருகிறோமா என்றால், பராமரித்து வருகிறோம். அழைப்பாணை வந்த பிறகு நான் அந்த பதிவேட்டை பார்வையிட்டேனா என்றால், பார்த்தேன். அந்த ஆவணத்திலும் புல எண் 713 வரவில்லை என்றால் எந்த பதிவேட்டிலும் சர்வே எண் வராது.